| | | |
|---|---|---|
| சாட்சி : PW2<br>ஆல்பர்ட் ஜெய ராஜ் | அ.வ.எண்.37/2020 | 25.10.2025 |

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) உங்கள் அப்பாவிற்கு மொத்தம் எத்தனை குழந்தைகள் என்றால் 3 பெண் பிள்ளைகள், 3 ஆண் பிள்ளைகள் ஆவார்கள். மேற்படி பெண் பிள்ளைகளில் யார் திருமணம் செய்து போனார்கள் என்றால் 5ம் வாதி தான் திருமணம் செய்து போனார். உங்கள் அப்பாவின் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் எங்கள் அப்பா மற்றும் இரண்டு சகோதரிகள், அந்த இரண்டு சகோதரிகளும் இறந்துவிட்டார்கள். அந்த சகோதரிகளுக்கு சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் எனது அப்பா பெயரில் இருந்த சொத்தை என்னுடைய தம்பி அவரது பெயருக்கு மாற்றி அவர் அவரது மனைவிக்கு அந்த சொத்தை எழுதி கொடுத்தது சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) நீங்கள் எந்த சர்வே எண்ணில் குடியிருந்து வருகிறீர்கள் என்றால் பட்டா எண்.2248, சர்வே எண்.531/16. மேற்படி சொத்து நீங்கள் கிரையம் வாங்கிய சொத்தா என்றால் இல்லை, எனது அப்பாவின் சொத்து தான். மேற்படி சொத்து உங்கள் அப்பா சொத்து என்பதால் உங்களுடைய பாகத்தை நீங்கள் அனுபவம் செய்து வருகிறீர்கள் என்றால் சரிதான். வில்லியம் வெளியில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான், ஆனால் வழக்கு சொத்திலும் சாமான்கள் வைத்து அனுபவம் செய்துவருகிறார். வில்லியம் குடியிருந்து வரும் வீட்டின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. வில்லியம் இருக்கும் வீடு உங்கள் அப்பாவிற்கு சொந்தமானதா என்றால் இல்லை, அவர் சம்பாதித்த சொத்து.

3) உங்கள் அப்பாவிற்கு வழக்கு சொத்தை தவிர சர்வே எண்.51/6, 51/7 ல் சொத்துக்கள் இருந்தது என்றால் இல்லை. 1988ல் மணி என்பவருக்கும் நீங்களும், உங்கள் அப்பாவும் ஒரு சொத்தை கிரையம் செய்து கொடுத்தீர்களா என்றால் எனது அப்பா மட்டும் தான் எழுதி கொடுத்தார். உங்கள் தம்பி எந்த வருடம் பிறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு இருக்கும் என்றால் 50 அடி நீளம், 12 அடி அகலம் இருக்கும். அந்த இடத்தில் பழைய கட்டிடம் இடிந்த பிறகு உங்கள் தம்பி தகர கொட்டகை போட்டுள்ளார் என்றால் பழைய வீடு இடியவில்லை, அதற்கு முன்பு ஓட்டு கொட்டகை போட்டுள்ளார். வழக்கு சொத்தில் இருந்த பழைய வீடு இடிந்து விட்டது என்றாலும் அதன் பிறகு உங்கள் தம்பி தகர கொட்டகை போட்டு வசித்து வருகிறார் என்றால் சரியல்ல.

4) வழக்கு சொத்து இல்லாமல் சர்வே எண்.51/6 மற்றும் 51/7 ல் சொத்துக்கள் இருந்தது என்றாலும் அதை நீங்களும், உங்கள் தம்பியும் விற்று பணத்தை பிரித்து கொண்டீர்கள் என்றால் சரியல்ல. அந்த பணத்தை கொண்டு நீங்கள் தற்போது குடியிருக்கும் இடத்தை வாங்கி வீடு கட்டியுள்ளீர்கள் என்றாலும், வழக்கு சொத்தை உங்கள் தம்பி பாகமாக விட்டு விட்டு தற்போது அதிலும் பாகம் கேட்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.